

சேலம் மத்திய மாவட்டம் கன்னங்குறிச்சியில் கழக அரசின் நான்காண்டு சாதனை பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு பேசினார். மாவட்ட கழக நிர்வாகிகள் அவை தலைவர் ஜி.கே.சுபாசு, பொருளாளர் மு. கார்த்திகேயன், பொதுக்குழு உறுப்பினர் பூபதி, ஒன்றிய செயலாளர் ரெயின்போ. நடராஜன் பேரூர் செயலாளர தமிழரசன். ஆகியோர் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று முன்தினம் (28.10.2025) கோடம்பாக்கம் பத்மராம் திருமண மண்டபத்தில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 10, 11 மற்றும் 13 ஆகிய மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நிவாரணப் பணிகள் மற்றும் அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் காரப்பாக்கம்.க.கணபதி, மயிலை த.வேலு, அசன்மௌலானா, ஜெ.கருணாநிதி, பிரபாகர் ராஜா, கண்காணிப்பு அலுவலர்கள் சிவஞானம், விசாகன், சிவகிருஷ்ணமூர்த்தி, வட்டார துணை ஆணையர்கள் எச்.ஆர்.கௌசிக், அஃதாப் ரசூல், நிலைக்குழுத் தலைவர் தனசேகரன், மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், நொளம்பூர் ராஜன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், முக்கிய சேவை துறைகள் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் விவசாயிகளின்

# உரத் தேவையைப் பூர்த்தி செய்ய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்வீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய இரசாயனம் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் ஜே.பி.நட்டாவுக்கு கடிதம்!

**சென்னை, அக் 30 -**

**தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு உரத் தேவையை பூர்த்தி செய்ய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கோரி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய இரசாயனம் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா** அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதன் விபரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் நடப்பு சம்பா (ரபி) பருவத்தில் பயிர் சாகுபடி முழு வீச்சில் நடைபெற்று வரும் நிலையில், உரங்களை உரிய நேரத்தில் வழங்குவதை சம்பந்தப்பட்ட உர நிறுவனங்கள் உறுதி செய்திடத் தேவையான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கோரி ஒன்றிய இரசாயனம், உரங்கள், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் ஜே.பி. நட்டா அவர்களை வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.10.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இந்தியப் பிரதமரிடம் தான் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, தமிழ்நாட்டிற்கு, 2025 குறுவை (காரீஃப்) பருவத்திற்குப் போதுமான உரங்கள் கிடைப்பதை உறுதி செய்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும், அந்த வகையில், 2025 குறுவை (காரீஃப்) பருவத்திற்கு முறையே 4.41 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 1.75 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி., 0.95 இலட்சம் மெட்ரிக் டன் எம்.ஓ.பி. மற்றும் 4.58 இலட்சம் மெட்ரிக் டன் என்.பி.கே. காம்ப்ளக்ஸ் உரங்கள் ஒதுக்கப்பட்ட நிலையில், தமிழ்நாடு 4.37 இலட்சம் மெட்ரிக் டன் (99%) யூரியா, 1.59 இலட்சம் மெட்ரிக் டன் (91%) டி.ஏ.பி., 0.70 இலட்சம் மெட்ரிக் டன் (74%) எம்.ஓ.பி. மற்றும் 3.70 இலட்சம் மெட்ரிக் டன் (81%) என்.பி.கே. காம்ப்ளக்ஸ் உரங்களைப் பெற்றுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நெல் விவசாயிகளுக்கு ரூ.215 கோடி செலவில் "குறுவை (காரீஃப்) சிறப்புத் தொகுப்பு" அறிவித்து செயல்படுத்தியது மற்றும் நீர்ப்பாசனத்திற்காக அணைகளை உரிய நேரத்தில் திறந்தது போன்ற மாநில அரசின் ஒருங்கிணைந்த முயற்சிகளால், தமிழ்நாடு நெல் உற்பத்தியை சாதனை அளவிற்கு அதிகரிக்க முடிந்ததாகவும் அவர் பெருமிதத்துடன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை அக்டோபர் 16, 2025 அன்று தொடங்கி யுள்ளதாலும், அனைத்து முக்கிய நீர்த்தேக்கங்களிலும் தண்ணீர் இருப்பதாலும், சம்பா பருவத்தில் அதிகபட்ச நெல் சாகுபடி பரப்பளவில் உற்பத்தி செய்திட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், நவம்பர் மாதத்தில் உரங்கள், குறிப்பாக யூரியாவின் தேவை அதிகரிக்கும் என்று தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இந்த நிலையில், சம்பா நெல் பரப்பளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், கூடுதலாக, மக்காச்சோளம், உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை மற்றும் கரும்பு போன்ற பிற பயிர்களின் சாகுபடியும் மாநிலம் முழுவதும் முழு வீச்சில் நடைபெற்று வருவதாகவும் அவர் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலவரப்படி, இந்திய அரசின் உரத் துறை, மாநிலத்தால் முன்மொழி யப்பட்ட 6.94 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 1.93 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி., 1.88 இலட்சம் மெட்ரிக் டன் எம்.ஓ.பி. மற்றும் 5.15 இலட்சம் மெட்ரிக் டன் என்.பி.கே. காம்ப்ளக்ஸ் உரங்களில், 6.50 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 1.50 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி., 1.80 இலட்சம் மெட்ரிக் டன் எம்.ஓ.பி. மற்றும் 5.14 இலட்சம் மெட்ரிக் டன் என்.பி.கே. காம்ப்ளக்ஸ் உரங்களை ஒதுக்கியுள்ளது என்றும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

நடப்பு சம்பா (ரபி) பருவத்தில் பயிர் சாகுபடி பல்வேறு சாதகமான காரணிகளால் முழு வீச்சில் நடைபெற்றுவரும் நிலையில், நேரடி உரங்களுக்கான தேவை குறிப்பாக, யூரியாவு க்கான தேவை வரும் நாட்களில் பெருமளவில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாநிலத்தால் முன்மொழியப்பட்ட 6.94 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 1.93 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி., 1.88 இலட்சம் மெட்ரிக் டன் எம்.ஓ.பி. மற்றும் 5.15 இலட்சம் மெட்ரிக் டன் என்.பி.கே. காம்ப்ளக்ஸ் உரங்களின் தேவையை, சம்பந்தப்பட்ட உர நிறுவனங்கள் உரிய நேரத்தில் பரிசீலித்து, வரும் மாதங்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்ய சரியான நேரத்தில் வழங்குவதை உறுதி செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு ஒன்றிய இரசாயனம், உரங்கள், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஜே.பி. நட்டா அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மேற்கு மண்டல கழகப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி தலைமையில்

# கோவை மாநகர் மாவட்ட பாக நிலை முகவர்கள் - பாக டிஜிட்டல் முகவர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் அறிக்கை!

கோவை, அக்.30-

கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை செந்தமிழ்ச் செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி" தேர்தல் பிரச்சார பயிற்சி கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கோவை மாநகர் மாவட்டத்திற்குட்பட்ட , சிங்காநல்லூர், கோவை தெற்கு, கோவை வடக்கு ஆகிய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து பாக நிலை முகவர்கள் (BLA-2) மற்றும் பாக டிஜிட்டல் முகவர்கள் (BDA) கூட்டம் இன்று (30.10.2025 - வியாழக்கிழமை) காலை 11.00 மணியளவில் ரீசாய் விவாகா மஹாலில் மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

அதுசமயம் கோவை நாடாளுமன்ற உறுப்பினர், தலைமைக் கழக நிர்வாகி கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழகப் பொறுப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், பாகநிலை முகவர்கள் (BLA-2), பாக டிஜிட்டல் முகவர்கள் (BDA), பாக ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பள்ளிக்கரணை ஈரநிலை விவகாரம்: செய்தித்தாளில் வந்த

# குற்றச்சாட்டுகள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்றவை!

## சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் விளக்கம்!

சென்னை, அக்.30-

சுற்றுசூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையில் செய்தி வெளியீடு வருமாறு:-

சென்னை பள்ளிக்கரணை காப்புக்காடு ராம்சார் தலத்திற்குள், ஒரு அடுக்கு மாடி கட்டிடத் திட்டத்திற்கு, சுற்றுச்சூழல் அனுமதி மற்றும் திட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இது குறித்து கீழ்க்கண்ட தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

1971 ஆம் ஆண்டு ஈரநிலங்கள் தொடர்பான மாநாட்டின் கீழ் நிறுவப்பட்ட ராம்சார் தல, சட்ட செயல்முறையின்படி, 2017 ஆம் ஆண்டு ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகளின் கீழ் (I) சதுப்பு நிலம் /காப்பு காடு, (II) ராம்சார் தலம் மற்றும் (III) ஈரநிலம் ஆகியவை மூன்று தனித் தனி மற்றும் வேறுபட்ட வகைப்பாடுகள் "சதுப்பு நிலம்" என்று அறிவிக்கப்படும்.

தமிழ்நாடு வனச்சட்டம், 1882 இன் கீழ் பள்ளிக்கரணை பகுதியில், சுமார் 698 ஹெக்டேர் பரப்பளவு, பள்ளிக்கரணை சதுப்பு நிலக் காப்புக் காடாக 2007 ஆம் அறிவிக்கப்பட்டது. இந்த இடத்தில எவ்விதமான கட்டுமானங்களுக்கும் அனுமதி அளிக்கப்படுவதில்லை. இது வனத்துறைக்கு சொந்தமான பாதுகாக்கப்பட்ட பகுதியாகும்.

ராம்சார் தலமாக அறிவிக்கப்பட்டுள்ள 1248 ஹெக். பரப்பளவில், பள்ளிக்கரணை சதுப்பு நில காப்புக்காட்டில் உள்ள 698 ஹெக். நிலமும், உரிய நடைமுறைகளுக்குப் பின்பு வரையறுக்கப்படவுள்ள 550 ஹெக். கூடுதல் நிலமும் அடங்கும். ஈர நில விதிகளின்படி பள்ளிக்கரணை சதுப்பு நில காப்புக் காடுகளுக்கு வெளியில் உள்ள நிலப்பகுதிகளை சர்வே எண்களுடன் கண்டறிந்து வரையறுப்பதற்கான நில உண்மை கண்டறிதல் ( Ground Truthing) இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. ஊடகங்களில் குறிப்பிடப்படும் கட்டுமானம் குறித்த நிலத்தின் புல எண்கள் வருவாய்த் துறை ஆவணங்களின்படி இத்தகைய தனியார் பட்டா நிலங்கள் ஆகும்.

இப்பணிகளை, ஒன்றிய அரசாங்க நிறுவனமான, தேசிய நிலையான கடற்கரை மேலாண்மை மையம் (NCSCM) தேர்வு செய்யப்பட்டு, குறிப்பிட்ட சர்வே எண்களுடன் எல்லைகளை வரையறுக்கும் பணி நவம்பர் 2024ல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது, தேசிய நிலையான கடற்கரை மேலாண்மை மையம் (NCSCM), பள்ளிக்கரணை காப்புக்காடு ராம்சார் தலத்திற்கான ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டத்தை (IMP) தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இம்மேலாண்மைத் திட்டமானது, சர்வே எண்களின் அடிப்படையில் எல்லைகளை வரையறுத்தல், டிஜிட்டல் வரைபடத்தில் நிலப் பயன்பாடு, ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017 இன் விதி 7 மற்றும் ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017, அத்தியாயம் XIII, பத்தி 62 இன் கீழ் அனுமதிக்கப்பட வேண்டிய அல்லது ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய செயல்பாடுகளின் பட்டியலை தயாரித்தல் (அனைத்து சம்பந்தப்பட்ட நபர்கள் பங்கேற்புடன்) உள்ளடக்கியது.

ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017, அத்தியாயம் XIII, 66 ஐ செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களின் படி.,பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"All Ramsar Sites, deemed covered under these Rules, shall also be notified as per the process laid out in paragraphs 57-64. This is proposed to ensure that the site boundaries are properly delineated and that knowledge about the same is available in the public domain. It is advised that the information in the 'Brief Document' may be consistent with the Ramsar Site Information Sheet (RSIS) submitted to the Ramsar Convention during site designation or updated thereafter."

இதன்படி, ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017ஐ செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதலில் மேலே உள்ள பத்தி 66 இன் படி, ராம்சார் தலத்தை அறிவிக்கும் செயல்முறை, ராம்சார் தலத்திற்குள் உள்ள சர்வே எண்கள் உட்பட வரைபடம் மற்றும் திட்டத்தை பொது களத்தில் வைப்பதாகும் என்பது தெளிவாகிறது. மேலும், பத்தி 63 இன் படி ராம்சார் தலமாக அறிவிக்கும் செயல்முறையின் ஒரு பகுதியாக, இதனை 60 நாட்களுக்குள் ஒரு பொது ஆலோசனைக்கு உட்படுத்துவது என்ற செயல்முறையும் வரையறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, பத்தி 64 ல், குறிப்பிட்டுள்ளவாறு ஆட்சேபனைகள் தெரிவிக்கும் நபர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் அல்லது பரிந்துரைகளை பரிசீலித்து அதனை நிவர்த்தி செய்ய மாநில அரசுக்கு 240 நாள் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, ஈரநில விதிகளின்படி பள்ளிக்கரணை ஈரநில அறிவிப்பு இன்னும் இறுதி செய்யப்படாத நிலையில், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்கள் பட்டா நிலங்கள் என்பதால், செய்தித்தாள் கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்றவை. மேலும், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் ராம்சார் தல எல்லை வரையறையானது, குறிப்பிட்ட சர்வே எண்களுடன் ஒப்பிட்டு பரப்பளவை வரையறுப்பது, நில உண்மைகண்டறிதல்" சோதனை மற்றும் அறிவிப்பு ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே நடைமுறைக்கு வரும். ராம்சர் தலம் அமையும் நிலங்கள் இன்னும் புல எண்களுடன் குறிப்பிடப்பட்டு வரையறுக்கப்படாததால், தற்போதைய பள்ளிக்கரணை சதுப்பு நில காப்புக் காட்டு எல்லைகளுக்கு வெளியே உள்ள தனியார் பட்டா நிலங்களுக்கு மட்டுமே சம்பந்தப்பட்ட அலுவலர்களால் ஒப்புதல்கள் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுச்சேரி மாநிலத்தில்

# சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிக்கு தி.மு.க. எதிர்ப்பு!

## துணைத் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் – எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா மனு!

புதுச்சேரி, அக்.30-

இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்திவுள்ளபடி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக புதுச்சேரியில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடனான கலந்தாலோசனைக் கூட்டம் ரெட்டியார்பாளையம் ஜெயா நகரில் உள்ள மாவட்ட தலைமைத் தேர்தல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது.

துணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி தில்லைவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திமுக சார்பில் மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா, அவைத்தலைவர் எஸ்.பி. சிவக் குமார், பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மற்றும் காங்கிரஸ், என்.ஆர்,காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட தேசிய மற்றும் மாநில கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அப்போது, தி.மு.க. சார்பில் துணைத் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் மனு ஒன்று அளிக்கப்பட்டது.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது: -

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் (Special Intensive Revision) பணி நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அவசரகதியில் அறிவிப்பு வெளி யிட்டுள்ளது. நடைமுறைச் சாத்தியம் இல்லாத வடகிழக்கு பருவமழை காலத்தில் வாக்காளர் திருத்தப் பணியை மேற்கொள்வது என்பது வாக்காளர்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தும். வாக்காளர் பட்டியல் சீரமைக்கப்பட வேண்டும் என்பதை திமுக மறுக்கவில்லை. ஆனால் அதனை அவசர கதியில் செய்யக்கூடாது என்பது தான். எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் தேர்தலை வைத்துக் கொண்டு, இப்போது இதனைச் செய்ய தொடங்குவது சரியா என தேர்தல் ஆணையம் மறுபரிசீலனைச் செய்ய வேண்டும்.

இது தேர்தல் ஆணையம் தன்னிச்சையாக எடுத்த முடிவாகத் தெரியவில்லை. மக்களாட்சியின் மாண்பை சிதைப்பதை வழக்கமாக கொண்டுள்ள ஒன்றிய பாஜக அரசு தன்னாட்சி பெற்ற அமைப்புகளை தங்கள் விருப்பத்திற்கு வளைத்து செயல்படுத்தி வருவது போல், தேர்தல் ஆணையத்தையும் ஆட்டிப்படைக்கிறது.

அதனால் தான் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் அனைத்தும் சமீபகாலமாக சர்ச்சைக்குரியதாகவும், சந்தேகத்திற்குரியதாகவும் இருக்கின்றன.

முறையான தேர்தல், வெளிப்படையான தேர்தல், நேர்மையான தேர்தல், உண்மையான தேர்தல் நடத்தி வந்த தேர்தல் ஆணையம் ஒன்றிய அரசின் உத்தரவுக்கு கட்டுப்பட்டு சந்தேகத்திற்குரிய தேர்தலை நடத்தி வருவதை தான் எங்கள் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் எதிர்க்கிறார்கள்.

அந்த வகையில் தேர்தல் ஆணையம் அவசர கதியில் வெளியிடப்பட்டுள்ள சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியை (Special Intensive Revision) தமிழகத்தைப் பின்பற்றி புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகமும் எதிர்க்கி றது என்பதை இக்கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் கெங்கவரம் ஊராட்சியில் 1.45கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார மருத்துவமனை கட்டிடம் கட்டுவதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம். எல். ஏ. அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயக்குமார், துணை சேர்மன் ஜெயபாலன், ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் யோக பிரியா, ஒன்றிய கவுன்சிலர் சத்யா கார்த்திகேயன் ,ஊராட்சி மன்ற தலைவர் மகேஸ்வரி பொற்செழியன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.